Madras. The Regional Centre will shortly be equipped with an electoronic digital computer. It is expected to pay special attention to the following :—

(1) Development of minimum weight design for transmission line, micro-wave and television towers.

(2) Precasting–Prefabrication and systems building.

(3) Prestressed concrete sleepers.

(4) Partially prestressed concrete.

(5) Nuclear Structural Engineering.

Traffic survey in Madras

* 215 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any traffic survey was conducted by the Highways Research Station in Madras in January 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1973 சனவரி மாதத்தில் சென்னையில் ஒரு கணிப்பு நடத்தப்பட்டது. தெற்கு கடற்கரைச் சாலையில், அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு எதிராகப் பிரிந்து ஓஷியானிக் ஓட்டலுக்கு எதிராக மீண்டும் தெற்கு கடற்கரைச்சாலையில் சேரும் பக்கச் சாலையை பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையை கணக்கிடவும் இச்சாலையில் எத்தனை வாகனங்கள் திருப்பிவிடலாம் என்பதனை அறிவதற்காகவும் இக்கணிப்பு நடத்தப்பட்டது.

சென்னை—கோவை விரைவு இரயில்.

*216 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும் சென்னைக்கும் இடையில் துரித ரெயில் வண்டி விடுவது பற்றி மாநில அரசு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

(இ) அமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. சு. துரைசாமி : கோவையிலிருந்து நிறையப் பேர் சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போதுள்ள வண்டிகள் இரவு நேரங்களில் வரும் வண்டிகள் கோவையிலிருந்து இங்கு வந்து வேலைகளை முடித்துச் செல்ல துரித வண்டி அமைப்பது தேவை என்று நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்திருக்கிறதா என்று கேட்டதற்கு இல்லை என்று சொன்னேன். கன்சல்டேட்டிவ் கமிட்டியில் இதுபற்றி விவாதிக்கப்பட்டு திரு. ஏ. என். நாயக் அவர்கள் கோவைக்கும் சென்னைக்கும் இடையே சூபர் எக்ஸ்பிரஸ் விடலாம் என்ற யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது.

இரட்டை இரயில் பாதைகள்.

* 217—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முக்கிய இரயில் பாதைகளில் இரட்டை இரயில் பாதை அமைக்கக் கோரி அண்மையில் நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தி உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : நமது அரசு இதுவரை வலியுறுத்தவில்லை என்றாலும் தமிழகத்தைப் பொறுத்தவரை இரட்டை ரெயில் பாதைகள் அமைப்பதற்கு மத்திய அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? நம்முடைய அரசுக்கு அதுபற்றிய முழு விவரம் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இரட்டை ரயில் பாதை வேலை முடிவுற்றவை—திருவொற்றியூர்—கூடூர் ; அரக்கோணம்—ரேணிகுண்டா ; அரக்கோணம்—சோலையாறு : சோலையாறு—ஈரோடு ; போத்தனூர்—மதுக்கரை ஆகியவை. இரட்டை ரயில் பாதை போடும் பணி நடந்து கொண்டிருப்பது—ஈரோடு—ஊத்துக்குழி ; ஊத்துக்குழி—இருகூர்.